## 2

# தேவனுக்காகச் சிறைப்பட்டவர்கள்

## (2 கொரிந்தியர் 2:14-17)

*"அநேகரைப்போல, நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், ..." (2:17).*

பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு குளிரான நவம்பர் மாதத்தின் நாள் ஒன்றில், அமெரிக்க அதிபர் தேர்தலுக்கு வேட்பாளராயிருந்த ஒருவர், தமது ஆதரவாளர்கள் மற்றும் தம்மை ஆதரிக்க உறுதியளிக்காதவர்கள் ஆகிய இருசாராரிடத்திலும் தமக்கு ஆதரவு திரட்ட, கடைசிநிமிட வேண்டுகோள் உரையாற்றுவதைக் கவனித்துக் கேட்பதற்கு, ஆயிரக்கணக்கான மக்களுடன் நான் நின்றிருந்தேன். அங்கு கூறப்பட்டவற்றில் ஒருசிறிதே எனக்கு நினைவில் இருக்கையில், அந்த நிகழ்வு உருவாக்க நோக்கங்கொண்ட சூழ்நிலையை இன்னும் என்னால் தனிச்சிறப்பாக நினைவிற்குக் கொண்டுவர முடிகிறது. ஒவ்வொரு விஷயமும் "நம்பிக்கையும் நல்லுணர்வும்" உடையதாகக் காணப்படும்படிக்கு நிர்வாகிக்கப் பட்டிருந்தது. ஆதரவாளர்களும் உறுதியளிக்காதவர்களும் ஆகிய இருசாராருமே, வெற்றி நிச்சயம் என்று நம்பும்படி இருந்தது. திட்டமிட்டவர்கள், அந்த மாலைவேளையில் தொலைக்காட்சியில் அந்த நிகழ்ச்சியின் ஒருநிமிடத் துணுக்குக் காட்சியை நாடுமுழுவதிலும் உள்ள பல இலட்சக்கணக்கானோர் காண்பார்கள் என்று அறிந்திருந்தனர். இந்தக் கொள்கை வெற்றிபெற முடியும் என்பதே அவர்கள் தகவல் தெரிவிக்க விரும்பிய ஒரே செய்தியாக இருந்தது. தோல்வியடையக் கூடிய கொள்கையில் எவரொருவரும் தம்மை ஈடுபடுத்த விரும்புவது இல்லை என்பதை அவர்கள் அறிந்திருந்தனர்.

இந்த வித்தகர்கள் அறிந்திருந்தபடி, "கூட்டத்தோடு கூட்டமாகச் செல்லும்" மனநிலையானது, நம்மை வெற்றியாளருடன் இணைவுகொள்ளும்படி வழிநடத்துகிறது. அவர்களுக்காக நம்மை நாம் இடர்ப்படுத்திக் கொள்வதற்கு முன்னர், அவர்களுக்குள் தகுதியான காரணங்கள் உள்ளன என்று அடிக்கடி நாம் நம்பி இணங்க வேண்டியதாக உள்ளது. தோல்வியடையக் கூடிய கொள்கைகள் நமக்குப் பிரியமாயிருப்பதில்லை.

இயல்பாகவே நாம், சபையில் வெற்றியின் அடையாளத்தைக் காண விரும்புகிறோம். வெற்றியின் முன்னெதிர்பார்ப்பு என்பது தொற்றக்கூடியதாக, ஒப்புக்கொடுத்துள்ள கிறிஸ்தவர்கள் மற்றும் உறுதிப்பாடு அளிக்காதவர்கள் ஆகிய யாவரையும் தூண்டக்கூடியதாக உள்ளது. இதன் விளைவாக, நாம் ஒரு நேர்மறையான சூழ்நிலையை உருவாக்க முயற்சி செய்கிறோம். வெற்றி அருகில் உள்ளது என்று காண்பிப்பதற்காக நாம், அளக்கக்கூடியதாக உள்ள

ஒவ்வொன்றிலும் வளர்ச்சியைச் சுட்டிக் காண்பிக்க விரும்புகிறோம். நாம், இந்த ஆண்டின் சபை வருகைக் குறிப்பைக் கடந்த ஆண்டின் குறிப்புடன் ஒப்பிட்டுப் பார்க்கிறோம். கொடுத்தலில் வளர்ச்சியை, மனமாற்றத்தில் புதிய புள்ளி விபரத்தை, மற்றும் சபை உடைமைகளின் வளர்ச்சியை நாம் சுட்டிக்காண்பிக்கிறோம். வெற்றியின் இந்த அடையாளங்கள், நமது திட்டம் தனது நோக்கத்தை இழந்துபோகவில்லை என்று நமக்குக் காண்பிக்கவும் வெற்றியின் பிற அடையாளங்களைக் கண்ணோக்கும்படி நம்மைத் தூண்டவும் பயன்படுத்தப்படுகின்றன.

14ம் வசனம் காண்பிக்கிறபடி, வெற்றியில் அகம்மகிழ்தல் என்பது இயல்பானதாகவே உள்ளது: "கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்[ணுகிற] ... தேவனுக்கு ஸ்தோத்திரம்." வெற்றியின் மெய் சிலிர்ப்பில் நமக்கு ஏற்படும் மகிழ்ச்சியைப் பவுல் பகிர்ந்து கொள்கிறார். சிலவேளைகளில், பவுலின் பின்வரும் வார்த்தைகளே நமது அனுபவத்திற்குப் பொருத்தமான வார்த்தைகளாக உள்ளன: "தேவனுக்கு ஸ்தோத்திரம்" (cf. ரோமர் 6:17; 7:25). எளிய ஆச்சரியமானது, இயேசு கிறிஸ்துவுக்குள் தேவன் நமக்குச் செய்துள்ளவற்றின் மீதான ஒரு பயபக்தி உணர்வை நமக்குக் கருத்தாகத் தெரிவிக்கிறது. ஆச்சரியங்கள் மாத்திரமே போதுமானதாக உள்ள இந்த வியப்பின் உணர்வுகள், நம்பகத்தன்மை வாய்ந்த கிறிஸ்தவத்தில் உள்ளடங்குகிறது என்பதில், புதிய ஏற்பாடு எவ்வித சந்தேகத்தையும் விட்டுவைப்பதில்லை. இந்தக் காரணத்தினால்தான், தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் அடிக்கடி பாடும்படி அசைக்கப்பட்டனர். பவுல் "கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்[ணுகிற] ... தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்று கூறுகையில் (2:14), அவரது வியப்பின் உணர்வை அவர்கள் பகிர்ந்து கொண்டனர்.

## வெற்றிமுழங்கும் கிறிஸ்தவம்

கிறிஸ்தவத்தின் வெற்றிக்குப் பவுல், வண்ணமயமான ஒரு உருவகத்தைப் பயன்படுத்துகிறார்: "... எப்போதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி ... ." இந்த உருவகமானது பழங்கால ரோமாபுரியின் வெற்றிவிழா ஊர்வலங்களில் இருந்து தரவழைக்கப்பட்டிருந்தது. வெற்றிகொண்டாடும் படைத்தளபதிகள், தங்களைப் போற்றிப் பாராட்டும் மக்கள் கூட்டங்கள் முன்னிலையில் யுத்தத்தில் இருந்து இல்லம் திரும்பவும் வேளையில், வெற்றியின் அடையாளங்களைக் காட்சிப்படுத்துவார்கள். வெற்றியினுடைய இந்த அடையாளங்களில், சிறைப்பிடிக்கப்பட்ட கைதிகளும், யுத்தத்தில் இருந்து இல்லத்திற்குக் கொண்டுவரப்பட்ட கொள்ளைப்பொருளும் உள்ளடங்கியிருந்தன[ர்]. இவ்வாறாகப் பவுல், தேவனுடைய கொள்கையானது தனது சுய வெற்றிக்கொண்டாட்ட ஊர்வலத்தைக் கொண்டிருந்தது என்று ஆச்சரிய உணர்வுடன் அறிவிக்கிறார். வெற்றியின் படைத்தளபதி நகரத்தை நோக்கி அணி நடையிட்டு வருவதுபோன்று, தேவன் தமது மக்களை வெற்றியில் வழிநடத்துகிறார்.

வெற்றியின் குறிப்பு என்பது புதிய ஏற்பாட்டில் சாதாரணமானதாக உள்ளது. 14ம் வசனத்தில், "எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள *thriambeuo* என்ற வார்த்தையானது கொலோசெயர் 2:15ல், அவர் "துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்க

மான கோலமாக்கி, *அவைகளின்மேல்* சிலுவையிலே *வெற்றிசிறந்தார்*"என்று கூறுகையில், கிறிஸ்துவினால் சிலுவையில் சாதிக்கப்பட்ட வெற்றிக்கும், பயன்படுத்தப்பட்டுள்ளது. இது நாம், ஏற்கனவே வெற்றி தீர்மானிக் கப்பட்டுள்ளதென்ற உறுதியுடன் நாம் ஒரு யுத்தத்தில் போராடுதல் போன்றதாக உள்ளது.

பவுலின் நிருபங்கள், கிறிஸ்து ஜெயித்துள்ள வெற்றியைப் பற்றிய குறிப்புகளை ஏராளமாகக் கொண்டுள்ளன. "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" (1 கொரிந்தியர் 15:57) என்பதே கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் இருந்து அவர் [பவுல்] தரவழைக்கும் முடிவாக உள்ளது. வெற்றியின் வாக்குத்தத்தம், கிறிஸ்துவின் வெற்றியை ரோமர் 8:37ல் அழகான கவிதைச் சொற்றொடரில் அறிவிக்கும்படி அவரை வழிநடத்திற்று: "இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே." ஆகவே வெற்றிகொண்டாடும் கிறிஸ்தவமே பவுலை மீண்டும் ஒருமுறை ஆச்சரிய உணர்வடைய வழிநடத்திற்று. "தேவனுக்கு ஸ்தோத்திரம்!"

நமது ஊழியங்கள், தேவனுடைய நிறைவான வெற்றியின் இந்த நிச்சயத்தைப் பவுலுடன் நாம் பகிர்ந்துகொள்ளும்படி வேண்டிக்கொள்கின்றன. நம்பிக்கையற்ற நிலை என்பது நம்பிக்கையைப் போலவே தொற்றக்கூடியதாக இருக்க முடியும். அது, ஊழியம் செய்வதற்கான மனவிருப்பத்தை நம்மிடத்தில் இருந்து களவுசெய்து நம்பிக்கையற்ற தன்மையை மற்றவர்களுக்குத் தகவல்தொடர்பு அளித்து, பிறழ்வுநிலையில் தனது சுயமான "இசைக்குழு வாகன" செயல்விளைவை உண்டாக்க முடியும். ஒரு வெற்றி ஊர்வலத்தில் கலந்துகொள்ளுதல் என்பது கிறிஸ்தவரின் அடையாளமாக உள்ளது.

## எவ்வகையான வெற்றிக்கொண்டாட்டம்?

2 கொரிந்தியர் நிருபத்தை தொடக்கத்தில் இருந்து 2:14வரை வாசிக்கும் எவரொருவரும், வியக்கத்தக்க ஆச்சரியமான விதத்தில் பவுல் திடீரென்று வெற்றியை உரிமை கோருதலின் அவசரத்தன்மையைக் கண்டு திகைப்படைவது நிச்சயம். வசனப்பகுதியின் தொடர்ச்சியில் பவுல் தற்காப்பு வாதம் செய்யும் தரப்பில் இருந்துள்ளார். அவர், தாம் உண்மையற்றவராக மற்றும் நிலையான தன்மையற்றவராக இருந்தார் என்ற பல்வேறு குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளித்திருந்தார். 2:1-13ல் அவர், கொரிந்தியர்களுக்கான தமது ஊழியத்துடன் இணைந்திருந்த வலிவான துக்கத்தை நினைவுபடுத்திக் கொண்டிருந்தார். கொரிந்தியருக்கு இந்த நிருபத்தை அவர், "மிகுந்த வியாகுலமும் மன இடுக்கமும் அடைந்தவனாய் அதிகக் கண்ணீரோடே" எழுதியிருந்தார் (2:4). அவரும் அவரது வாசகர்களும் வேதனையை அனுபவித்திருந்தனர் (2:2, 5). அவர், கொரிந்து சபை மற்றும் அதன் பிரச்சனைகள் மற்றும் தீத்துவைத் தாம் சந்திக்கவும் அவர்களைப் பற்றிய செய்தியைப் பெற்றுக்கொள்ளவும் தவறியது ஆகியவற்றினால் தம் ஆவிக்கு "அமைதல் இல்லாது" போனதாகக் கூறுகிறார். 14ம் வசனத்தின் வெற்றிக்கான உரிமைகோருதல், அவர் தமது ஊழியம் தமக்குக் கொண்டுவந்துள்ள அசாதாரணமான வேதனை மற்றும் வியாகுலத்தை விவரிக்கும் அதே வேளையில் மிகச்சரியாக வருகிறது என்பது அந்த வெற்றிக்கான உரிமைகோருதல் பற்றிக் குறிப்பிடத்தக்க உண்மையாக உள்ளது! அவர்

ஊழியத்தின் மனவேதனை பற்றி விவரிக்கும் அதே வேளையில், "கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணுகிற ... தேவனுக்கு ஸ்தோத்திரம்!" என்று கூறுகிறார். 7:5வரையில் அவர் கொரிந்துநகரில் இருந்து வந்த செய்திபற்றிய தமது வரலாற்றைத் திரும்பத் தொடங்காதிருக்கிறார்.

வேதாகமத்தின் தீவிரமான மாணவர்கள், 2:14-7:4வரையிலுள்ள பகுதியானது ஒரு தனிப்பட்ட அலகாக உள்ளது, இது 2மற்றும் 7ம் அதிகாரங்களில் சபை பற்றிய பவுலின் சஞ்சலம் பற்றி விவரிப்பு தரப்பட்ட அதேவேளையில் எழுதப்படவில்லை என்று கருத்துத் தெரிவிக்கும் அளவுக்கு, 14ம் வசனத்தில், வெற்றிக்கான பவுலின் உரிமைகோருதல் பொருத்தமற்றதாகக் காணப்படுகிறது. மன ஓட்டத்தில் மாறுதல் குறிப்பிடத் தக்கதாக உள்ளது. இவ்வசனங்கள், மனக்கவலை மற்றும் வெற்றிக்கொண்டாட்டம் என்ற மாறுபட்ட இரு மன ஓட்டங்கள் ஒருசேர நிற்கும்படி விளக்கப்படுத்துதல் குறித்து நாம் திகைப்படைகிறோம்.

ஒருவேளை நாம் 13 மற்றும் 14ம் வசனங்களுக்கு இடையிலான வேறுபடுத்தும் ஒப்பீட்டை மிகைப்படுத்தியிருக்கலாம். பவுல் தம்மை, வெற்றிக்கொண்டாட்ட ஊர்வலத்தை வழிநடத்திச் செல்லும் தளபதியாக விவரிப்பதில்லை. அவரே, சிறைப்பட்டவர்களில் ஒருவராக "வெற்றிக்கொண்டாட்டத்தில்" வழிநடத்தப் பட்டிருக்கிறார். இந்த வெற்றி ஊர்வலத்தில் ஒரு கைதி என்ற வகையில் அவர் "எப்போதுமே" வெளிப்படையாகக் காட்சிப்படுத்தப் பட்டிருக்கிறார். அவரது ஊழியத்தின் மூலமாக அவர், தேவனுடைய அறிவை "பரப்புகிறார்." இந்த வெற்றி ஊர்வலத்தில் கைதியின் பணிப்பொறுப்பைத் தாம் கொண்டிருக்க முடியும் என்பதற்காகப் பவுலின் நன்றியுணர்வானது, "தேவனுக்கு ஸ்தோத்திரம்!" என்று வியப்படைய அவரை வழிநடத்துகிறது.

தேவனுடைய வெற்றிக்கொண்டாட்ட ஊர்வலத்தில் பவுலின் பணிப்பொறுப்பை நாம் புரிந்து கொண்டால், 13 மற்றும் 14ம் வசனங்களுக்கு இடையிலான உறவைக்குறித்து நாம் அதிர்ச்சி அடையமாட்டோம். இது, 1:8-11 மற்றும் 2:1-13ல் விவரிக்கப்பட்டுள்ளபடி, அவரது ஊழியத்தின் பெரும் வேதனை மற்றும் வலி ஆகியவற்றின் மூலமாக இவ்வாறு இருக்கச் சாத்தியம் உள்ளது, தேவனுடைய வெற்றி ஊர்வலம் நடைபெறுவதை பவுல் காண்கிறார். சபைகள் பற்றித் தாம் கொண்டிருந்த பெரும் வேதனை என்பது இழந்துபோகப்பட்ட கொள்கையாக அல்ல, ஆனால் வெற்றியில் முடிகிற நாடகத்தின் ஒரு பாகமாக உள்ளது என்று அவர் அறிகிறார். இந்தக் கொள்கைக்காகத் தாம் ஒரு கைதியாக இருப்பதற்காக நன்றி நிறைந்தவராக இருக்கிறார்.

தேவனுடைய வெற்றி ஊர்வலத்தில் பவுலின் பங்குப்பணி பற்றிய அவரது விவரிப்பு, 1 கொரிந்தியர் 4:9ல் அவர் பயன்படுத்துகிற வல்லமைநிறைந்த உருவகத்தின் எச்சமாக உள்ளது: "எங்களுக்குத் தோன்றுகிறபடி தேவன் அப்போஸ்தலர்களாகிய எங்களை மரணத்துக்குக் குறிக்கப்பட்டவர்கள்போலக் கடைசியானவர்களாய்க் காணப்படப்பண்ணினார்; நாங்கள் உலகத்துக்கும் தூதருக்கும் மனுஷருக்கும் வேடிக்கையானோம்." "வேடிக்கை" என்பதற்கு *theatron* என்பதே கிரேக்க வார்த்தையாக இருப்பதால், நாம் பவுலின் வார்த்தையை, "நாங்கள் உலகத்திற்கு ஒரு அரசங்கசாலையாக ஆனோம்" என்று தரவழைக்கலாம். இவ்வார்த்தைகள் நமக்கு, இயேசு சிலுவையில் அறையப்பட்டதைக் கண்ட கூட்டத்தார்களுக்கு அவர் தாமே ஒரு "காட்சிப்பொருள்" வகையாக இருந்தார்

என்பதை நினைவூட்டுகின்றன. அவர் ஒரு பொதுவான உதாரணமாகவும் சிறுமையடைதலின் அடையாளமாகவும் மரித்தார். 1 கொரிந்தியர் 4:9ல் பவுலின் வார்த்தைகள், கிறிஸ்துவின் ஊழியக்காரர், இயேசுவின் முடிவைப்பகிர்ந்து கொள்வதையும், ஒரு "காட்சிப்பொருள்" ஆவதிலும் மனவிருப்பமாயிருக்கிறார் என்று சுட்டிக்காண்பிக்கின்றன.

பவுலின் ஊழியம் அவர் கிறிஸ்துவின் மரணத்தைப் பகிர்ந்துகொள்வதைக் கொண்டு பண்புபடுத்தப்படுகிறது என்பது, 2 கொரிந்தியர் நிருபத்தில் ஒரு பிரதான ஆய்வுக்கருத்தாக உள்ளது. தேவனே அவரை [பவுலை] "எப்போதும்" வெற்றிசிறக்க வழிநடத்தியது போலவே, பவுலும் இயேசுவின் மரணத்தை "எப்போதும்" தமது சரீரத்தில் சுமந்துகொண்டிருக்கிறார் (4:10). அவர் கிறிஸ்துவின் "பலவீனங்களை" பகிர்ந்துகொள்ள மனவிருப்பமாயிருக்கிறார் (13:4; cf. 11:10). ஆனால் அப்போஸ்தலரின் பலவீனம் என்பது பிரதான ஆய்வுக்கருத்தாக இருக்குமென்றால், இந்த ஆய்வுக்கருத்து, தேவனுடைய பலமானது பலவீனங்களில் உள்ளது என்ற உரிமைகோருதலைத் துணையாகக் கொண்டுள்ளது: "... பலவீனத்திலே என் பலன் பூரணமாய் விளங்கும் ... அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்" (12:9, 10). பவுல் தேவனுடைய கைதியாக இருப்பதால், உண்மையில் பவுலின் மனவேதனையே தேவனுடைய வெற்றி ஊர்வலமாக உள்ளது.

"எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணுகிற ... தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்ற நமது ஆச்சரியமானது பவுல் தகவல் அளித்த செய்தியின் ஆழம் மற்றும் அனுபவத்தைக் காட்டிலும் குறைவுபடத் தனிப்பட்ட சாத்தியக்கூறு உள்ளது. வார்த்தைகளின் சந்தர்ப்பப்பொருள் இன்றியே நாம் அவற்றின் மெய்சிலிர்க்கச் செய்யும் தன்மையை மகிழ்வுடன் அனுபவிக்க முடியும். நாம் நாடுகிற வெற்றிகள், தேவனுக்கு நமது ஊழியத்தில் வேதனையைத் தவிர்க்க நாடுபவையாக இருக்கலாம். நாம் சிலுவையின் வேதனையில் இருந்து வளர்ந்திராத, மலிவான மற்றும் உணர்வுப்பூர்வமான வெற்றிகளை நாடலாம். வெற்றிக்கான நமது மாதிரிகள் சிலுவையிலிருந்தல்ல ஆனால் அதற்கு மாறாகச் சந்தையிலிருந்து தரவழைக்கப் பட்டிருக்கலாம். வெற்றியின் வினோதமான வகையொன்றைப் பவுல் அறிவிக்கையில், அது சிலுவையிலிருந்து வளர்ந்த தனித்துவமான கிறிஸ்தவ வெற்றியாயிருந்தது.

சபையில் ஒரு பொறுப்பை நாம் மேற்கொண்ட பின்பு, நம்ப இயலாத எண்ணிக்கையில் பிரச்சனைகள் நம்மை எதிர்கொள்வதால் கலக்கம் அடைதல் என்பதே நாம் அடிக்கடி கொண்டுள்ள முதல் பதில்செயலாக உள்ளது: சமாதானத்தைக் காத்துக்கொள்வதற்கு நாம் செலவிடும் சக்தி, அக்கறையற்ற கிறிஸ்தவர்களுக்கு ஊழியம் செய்வதில் நாம் மேற்கொள்ளும் முயற்சிகள், மற்றும் மன எழுச்சியற்ற வழக்கமான பணிகள். நாம் மேற்கொள்ளும் இந்தப் பணிப்பொறுப்புக்களில் எதுவும், ஒரு வெற்றி ஊர்வலம்போல் காணப்படுவதில்லை. வழக்கமாக நாம், இந்தப் பணியுடன் இணைந்திருக்கும் துக்கத்திற்குத் தயாராக இல்லாதிருக்கிறோம். ஆனால் தேவனுடைய வல்லமை நன்றி சொல்லப்படாத நமது பணிகள் மூலம் செயல்பட முடியும் என்று பவுல் கருத்துத் தெரிவித்தார். நாமும்கூட வெற்றி ஊர்வலத்தில் பணிப்பொறுப்பைக் கொண்டிருக்கிறோம்.

பல நிகழ்வுகளில், இந்த வெற்றியின் அடையாளங்களை நாம் பயன்படுத்த

*முடியாதிருந்தாலும், நமது ஊழியங்கள் தேவனுடைய வெற்றி ஊர்வலத்தின் பாகமாக இருக்கின்றன என்ற நம்பிக்கையில் நாம் வாழலாம். ஒவ்வொரு கிறிஸ்தவ நடத்துனரும், தாம் ஈடுபட்டுள்ள ஊழியத்தில் ஏதாவது வெற்றி கிடைக்கும் என்று உறுதிப்பாடுபற்றி கேள்விகள் மற்றும் சந்தேகங்களை எழுப்புவதற்குப் போதுமான ஏமாற்றங்களைக் கொண்டிருக்கின்றார். நாம் நம்புகிற மக்கள் நம்மை ஏமாற்றத்திற்கு உள்ளாக்கலாம், மற்றவரை ஊக்கப்படுத்த நாம் மேற்கொள்ளும் முயற்சி, காணக்கூடிய விளைவு எதையும் பெற்றிராதி ருக்கலாம். ஆனால் உண்மையான சந்தோஷத்தைக் கொண்டு வருகிற வெற்றி கரமான தருணங்கள் வரமுடியும். கொரிந்தியர்கள் பவுலை ஏமாற்றி இருக்க வில்லை என்று நற்செய்தியைத் தீத்து கொண்டுவந்தபோது, இறுதியாக அவரது அமைதலற்ற ஆவி (7:5) அமைதிப்படுத்தப்பட்டு ஊக்குவிக்கப்பட்டது என்று அவர் அறிந்திருந்ததால், "எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணுகிற ... தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்ற பவுலின் கூற்று, அவரது மனவேதனையான வரலாற்றில் இடையீடு செய்யலாம். அவர், "உங்கள் வாஞ்சையையும், உங்கள் துக்கிப்பையும், என்னைப்பற்றி உங்களுக்கு உண்டான பக்திவைராக்கியத்தையும் அவன் கண்டு, உங்களால் அடைந்த ஆறுதலைத் தெரியப்படுத்தினதாலும், நானும் ஆறுதலடைந்து அதிகமாய்ச் சந்தோஷப்பட்டேன்" (7:7) என்று கூறுகிறார். பவுலின் ஊழியம், அவர் தமது உழைப்பிலிருந்து சில பலன்களைக் கண்டதில் அவருக்குச் சந்தோஷத்தைக் கொண்டுவந்திருந்தது.*

## கிறிஸ்துவின் நற்கந்தம்

*வெற்றி ஊர்வலமானது, ஒரு அணிவகுப்பைப் போன்று, மகிழ்வுநிறைந்த காட்சி உருவங்களுடன், அசாதாரணமான காட்சியாக இருந்தது. சீருடையணிந்த தளபதிகளும் போர்வீரர்களால் ஏந்தி பிடிக்கப்பட்டிருந்த கொடிகளும், பலத்ததொரு காட்சிச் செய்தியைச் சுமந்திருந்தன. ஆனால் அந்தக் "காட்சியுடன்" கூடுதலாக வெற்றியின் "வாசனையும்" இருந்தது. காற்றில் நிரம்பி இருந்த எரிக்கப்படும் வாசனைப் பொருளின் வாசனை, வெற்றியின் செய்தியை மக்கள்கூட்டத்திற்குக் கொடுத்தது. இந்த உருவகமானது பவுலை, அவரது ஊழியத்தின் காற்றில் "வெற்றியின் வாசனை" இருந்தது மற்றும் அவர் ஒரு முக்கியமான பணிப்பொறுப்பை மேற்கொண்டார் என்று கூற அனுமதிக்கிறது.*

*வாசனைப் பொருட்களின் உருவகம், வேதாகமத்திலும் யூதர்களின் பிற இலக்கியங்களிலும் ஒரு முக்கியமான பணிப்பொறுப்பைச் செயல்படுத்தி யது. அவ்வப்போது, தேவனுடைய வார்த்தை ஒரு வாசனைப்பொருளுடன் ஒப்பிடப்பட்டது. மற்ற பல சந்தர்ப்பங்களில், தேவனுக்குச் செலுத்தப்பட்ட பலியானது சுகந்த வாசனையாக இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது (காண்க ஆதி யாகமம் 8:21; யாத்திராகமம் 29:18; லேவியராகமம் 1:9). இவ்வாறாகப் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் பலி, தேவனுக்கு ஒரு "சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும்" இருந்தது என்று கூறப்பட்டது (எபேசியர் 5:2). 14ம் வசனத்தின்படி, "அவரை அறிகிற அறிவின் வாசனை" உலகத்திற்குப் பரப்பப் பட்டுக்கொண்டிருக்கிறது. இயேசுவின் வரலாறு கூறப்படுகிற இடங்களில் எல்லாம், இந்த "வெற்றியின் வாசனை" பரப்பப்பட்டுக்கொண்டிருக்கிறது. அவரது சிலுவையின் வரலாறு கிறிஸ்தவர்களுக்கு, தேவனுடைய இரட்சிப்பின் பலத்த வல்லமையாக உள்ளது (1 கொரிந்தியர் 1:13-15;* cf. *ரோமர் 1:14-17). இவ்வாறாக,*

பரப்பப்படுகிற வாசனையானது, கெட்டுப்போகிறவர்களுக்கு தோல்வியின் வாசனையைச் சுமந்து செல்வது போலவே (2:16), இரட்சிக்கப்படுகிறவர்களுக்கு ஜீவனையும் வல்லமையையும் அறிவிக்கிறது (2:16).

மனதை ஈர்க்கும் இந்த உருவகத்துடன் பவுல், சிலுவையின் வரலாறு உலகத்திற்கு மிகவும் தீர்மானமான செய்தியாக உள்ளது என்று அறிவிக்க விரும்புகிறார். ஏனென்றால், இது நித்தியத்தின் முக்கியத்துவம் வாய்ந்த, ஜீவன் மற்றும் மரணம் என்ற விஷயங்களைப் பற்றியதாக உள்ளது, இதனுடன் ஒப்பிடுகையில், காட்சியாக உள்ள வெற்றி ஊர்வலங்கள் அற்பமானவைகளாக இருந்தன.

தீர்மானமான இந்த நிகழ்ச்சியில், செய்தியாளர் மற்றும் அவரது பணிப்பொறுப்பு என்பதே 2 கொரிந்தியர் நிருபத்தின் விஷயமாக உள்ளது. தற்காப்புப் பகுதியில் இருக்கும் பவுல், அவர் மிகவும் தீவிரமான ஒரு ஊழியத்தைச் செயல்படுத்த மிகவும் நேர்மையற்றவராக இல்லை என்றாலும், அவர் மிகவும் பலவீனமாகவும் திறமையற்றும் இருந்தார் என்று உரிமைகோரியவர்களுக்குப் பதில் அளித்தார். தெய்வீக வாசனையாக இருப்பவர் இயேசு மாத்திரமல்ல என்பதைப் பவுல் அறிகிறார். பிலிப்பியருக்கு அவர் கூறுவது போன்று, சில வேளைகளில் நமது சிறு பங்களிப்புகள், கொடைகள் ஆகியவையும் கூட, "சுகந்த வாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக" இருக்கின்றன (பிலிப்பியர் 4:18). நமது வாழ்வு முழுவதுமே தேவனுக்கு "ஜீவபலியாக" இருக்கலாம் (ரோமர் 12:1). பிலிப்பியர் 2:17ல் பவுல் தம்மை "உங்கள் விசுவாசமாகிய பலியின்மேலும் ஊழியத்தின்மேலும் நான் வார்க்கப்பட்டுப்போனாலும்" என்று விவரிக்கும்போது, இந்தக் கருத்தைப் பவுல் சிறப்பாய் சித்தரிக்கப்பட்ட முறையில் ஏற்படுத்தினார். கிறிஸ்துவின் செய்தியாளர்கள் பலியாகவும் வார்க்கப்படுகின்றனர்.

பவுலின் நேர்மை மற்றும் அவர் நம்பத்தக்கவர் என்பதற்கான ஆதாரச் சான்றுகள் பற்றிக் கேள்வி எழுப்பியிருந்தவர்களுக்கு, தேவனுடைய வெற்றி ஊழியத்தில் அவர் முக்கியமான பணிப்பொறுப்பைக் கொண்டுள்ளார் என்பது, திகைக்கவைக்கும் அவரது உரிமைகோருதலாக இருந்தது. தேவன் "எங்களைக்கொண்டு" கிறிஸ்துவின் வரலாற்றின் "வாசனையை வெளிப்படுத்துகிறார்" (*osme*, 2:14) மற்றும் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் "நற்கந்தமாயிருக்கி"ன்றனர் (*euodia*, 2:15) என்று பவுல் கூறுகிறார். கிறிஸ்துவின் இந்தச் சிலுவையைப் பவுல் எங்கெல்லாம் பகிர்ந்து கொள்கிறாரோ, மற்றவர்களுக்காக தம்மையே வார்க்கிறாரோ அங்கெல்லாம் அவர் தமது கர்த்தருடன் "வெற்றியின் வாசனையை" பகிர்ந்துகொள்கிறார், மற்றும் அந்த நற்கந்தம் தேவனிடத்திற்கு எழும்புகிறது.

பொருட்படுத்தப்பட வேண்டியதாக உள்ள மாபெரும் வெற்றி ஊர்வலத்தில் தேவனுடைய கருவியாக இருப்பதாக உரிமைகோருதல் திகைக்கச் செய்வதாக இருந்தது. இதன் விளைவாகப் பவுல், "இவைகளை நடப்பிக்கிறதற்கு எவன் தகுதியானவன் [*hikanos*]?" என்று கேட்கிறார். "ஒருவரும் இல்லை" என்பதே பதிலாக உள்ளது என்பது தெளிவு. அவருக்கே மிகவும் அதிகமாயிருந்த பெரிய பொறுப்பினால் மூழ்கடிக்கப்பட்ட ஒருவரிடத்தில் இருந்து இந்தக் கேள்வி வருகிறது. தேவனுடைய நற்கந்தமாக இருத்தல் என்பது பயபக்தியான ஒரு பொறுப்பாகும் என்று அவர் அறிகிறார். இந்தக் கேள்விக்கு பவுல் தமது சொந்தப் பதிலை 3:5, 6ல் அளிக்கிறார்: "... எங்களுடைய தகுதி [*hikanotes*,

நேரடி அர்த்தத்தில் "போதுமானதன்மை"] தேவனால் உண்டாயிருக்கிறது. புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்."

## கலப்பட போதகர்களாக இராதது பற்றி

பவுல் தற்காப்புப் பகுதியில் இராதிருந்தால், அவர் தேவனுடைய வாசனையைப் பரப்புவதில் தமது சிறப்பான இடத்தைப் பற்றிக் கூறியிருக்க மாட்டார். 2:17 காண்பிக்கிறபடி, அவர் தேவ வசனத்தைக் "கலப்பாய்" போதிக்கிறார் என்ற குற்றச்சாட்டிற்குப் பதில் அளித்தலே அவரது உண்மையான அக்கறையாக உள்ளது. இவ்வசனத்தில் பவுலின் மறுப்புரையானது, ஒவ்வொரு கிறிஸ்தவ நடத்துனரைப் போலவே அவரும் தமது உண்மைத்தன்மை பற்றிய சந்தேகங்களை வெற்றிகொள்ள வேண்டி இருந்தது என்பதைக் கருத்தாகத் தெரிவிக்கிறது.

"கலப்பு" என்பதற்குப் பவுல் பயன்படுத்திய (kapeleuontes என்ற) வார்த்தையானது, மொத்த வியாபாரியிடமிருந்து தமது சரக்குகளை வாங்கிக்கொண்டுவந்து, இலாபத்திற்காக அவற்றை விற்கும் சில்லறை வியாபாரிக்கான சாதாரணமான வார்த்தையாக இருந்தது. சில்லறை வியாபாரிகள் தங்கள் இலாபத்தை அதிகரித்துக் கொள்வதற்காக, பொருள்களின் தரத்தை [கலப்படம் செய்து] அடிக்கடி குறைத்து விடுவார்கள் என்பதால், இவ்வார்த்தை "கலப்படம்செய்தல்" என்ற அர்த்தத்தைக் கொண்டுள்ளது. சில வேளைகளில் இவ்வார்த்தை, தண்ணீரைக்கொண்டு தாங்கள் விற்கும் மதுபானங்களை நீர்த்துவிடச்செய்யும் மதுபான வர்த்தகர்களுக்குப் பயன்படுத்தப்பட்டது. தத்துவஞானிகள் இவ்வார்த்தையை, பணத்திற்காகத் தங்கள் செய்தியை விற்கும், சில வேளைகளில் தங்கள் சுய இலாபத்திற்காகச் செய்தியைத் திரித்து நீர்த்துப்போகச்செய்யும் போதகர்களைக் குறிக்க பயன்படுத்தினர். ஆகையால், சில்லறை வர்த்தகத்தில் "கலப்பட வியாபாரிகள்" இருந்தனர் மற்றும் சத்தி யத்தைப் போதிப்பதாக உரிமைகோரிய "கலப்படபோதகர்கள்" இருந்தனர், தான் விற்கும் உற்பத்திப்பொருளில் தனிப்பட்ட ஈடுபாடு எதுவும் கொண்டிருக்க மாட்டார் என்பது கலப்பட வியாபாரியின் ஒரு பண்பாக இருந்தது. அவரது ஒப்புக்கொடுத்தல் அல்ல, ஆனால் பேராசை, பெருவிருப்பம் என்பவையே அவரது உற்பத்திப்பொருளுக்கு அவரை வழிநடத்தியவையாக இருந்தன.

The New English Bible என்ற வேதாகமம் 2:17ம் வசனத்தை ஏற்புடைய வகையில் தரவழைக்கிறது: "நாங்கள் தேவனுடைய வசனத்தை விலைகூறிவிற்பவர்களல்ல." சந்தேகத்திற்கு இடமின்றி, வசனத்தைக் கலப்படம் செய்து போதிப்பவர்களுக்கு, கிறிஸ்துவின் வரலாறு என்பது தங்களுக்கு இலாபம் வரும் என்று நம்பி விற்கக்கூடிய ஒரு பொருளாக மாத்திரமே இருந்தது. தங்களைத் தாங்களே "விற்பனை" செய்பவர்களும் எப்போதும் இருப்பார்கள். இந்த சூழ்நிலையானது, மனிதன் பயபக்தி உணர்வை இழந்துபோகும் எல்லா இடங்களிலும், தாங்கள் ஈடுபட்டுள்ள ஊழியத்தைப் பற்றி வியப்படையும் எல்லா இடங்களிலும் நிலவுகிறது. நாம் தேவனுடைய ஊழியத்தில் "வெற்றியின் வாசனை" பற்றிய கண்ணோக்கை இழந்திருக்கும்போது, நமது ஊழியங்கள் வேறெந்தப் பணிப்பொறுப்பிற்கும் சமானமாகி விடுகின்றன. வெற்றி ஊர்வலத்தில் தங்களைத் தேவனால் சிறைப்பிடிக்கப்பட்டவர்களாகக்

*கண்ணோக்குபவர்களுக்கு, ஆதாயத்திற்காக "தேவனுடைய வசனத்தைக் கொண்டிருத்தல்" என்பது நினைத்துப் பார்க்க இயலாததாக உள்ளது.*

## முடிவுரை

*தேவனுடைய திட்டத்தில் நமது இடத்தைப் பற்றிய தரிசனம் என்பதே, நமது காலத்தில், ஊழியத்தைப்பற்றிய தவறான எண்ணப்போக்கிற்கு பதிலாக உள்ளது. தேவனுடைய ஊழியர்கள் எல்லாருடைய தனிப்பட்ட தியாகங்களின் மூலமாகவே, இந்த வரலாற்றின் சுகந்த வாசனை பரப்பப்படுகிறது. ஏதோசில அற்பமான தொழிலில் நாம் ஈடுபட்டிருக்கவில்லை; நாம் பரப்புகிற வாசனை என்பது ஜீவன் மற்றும் மரணம் பற்றிய விஷயமாக உள்ளது. நாம் பகிர்ந்துகொள்ளுகிற வேதனை மற்றும் துக்கம் என்பது கிறிஸ்துவின் சிலுவையினுடைய பகிர்ந்துகொள்ளுதலாக உள்ளது. எல்லைக்கு உட்பட்ட நமது வட்டாரத்தில் நாம் செயல்படுத்தும் பணிபொறுப்பு, விளைவுகளைக் காண்பிக்காததாகக் காணப்படலாம். ஆனால் அது "எல்லா இடங்களிலேயும்" அவரை அறிகிற அறிவின் வாசனையைப் பரப்புதலின் பாகமாக உள்ளது (2:14).*

*மனிதர்கள் தங்கள் ஊழியத்தில் குறிப்பான மகிமை எதையும் காணாதபோது கலப்படமாய் போதிக்கிறவர்கள் ஆகின்றனர். ஆனால் கிறிஸ்துவின் ஊழியத்தில் உண்மையாய் "சிறைப்பிடிக்கப்பட்டுள்ளவர்" எவரும் சுவிசேஷத்தை விற்பனைப்பொருளாக ஒருபோதும் நடத்த மாட்டார். வசனமானது அதன் ஊழியத்தில் நம்மைப் பற்றிப் பிடித்துள்ள ஒரு வெற்றிகரமான அணிவகுப்பாக இருக்குமென்றால், "வசனத்தை விற்பனை செய்தல்" என்பது நினைக்க இயலாததாக இருக்கும். ஆகையால், ஒரு கிறிஸ்தவர் தம்மைக் காட்டிலும் மகாப்பெரியதாக உள்ள ஒரு கொள்கையினால் "பிடிக்கப்பட்டு, கைதியாக இட்டுச்செல்லப்பட்டிருத்தல்" என்பது கிறிஸ்தவரின் அடையாளமாக உள்ளது. வர்த்தகருடைய பொருட்களைப்போன்று வாங்கி விற்கக்கூடிய பொருளாக இந்த வரலாறு இருப்பதில்லை. கிறிஸ்தவர் "கிறிஸ்துவின் நற்கந்தமாக" இருக்கிறார், அவர் தமது நடக்கையினால், தம்மை இவ்வரலாற்றினால் பிடிக்கப்பட்டவராகக் காண்பிக்கிறார்.*